THE TIMES OF INDIA, CHENNAI
FRIDAY, DECEMBER 5, 2008

# HONOURING THE GREAT POETS

C Suresh Kumar




**THE GODS COME VISITING:** Children dressed as mythological heroes and gods take part in a procession in honour of the 63 Nayanmars, the Saivaite saints, at L B Road in Adyar. The procession began in Chidambaram and will proceed to other 'sthalams' of Saiva Puranam.

தினமணி

வியாழக்கிழமை, 20 நவம்பர், 2008

# அறுபத்து மூவர் அருள் ஞான ரதம் தஞ்சை வருகை

தஞ்சாவூர், நவ. 19: அடியவர் அறுபத்து மூவர் அருள் ஞான உலா ரதம் தஞ்சாவூருக்கு புதன்கிழமை வந்தது.

சிதம்பரத்தில் அக்டோபர் 9-ம் தேதி அடியவர் அறுபத்து மூவர் அருள் ஞான உலா ரதத்தை அறநிலையத் துறை அமைச்சர் கே.ஆர். பெரியகருப்பன் தொடங்கி வைத்தார். ரதத்தில் அறுபத்தி மூன்று நாயன்மார்களின் சிலைகள் பூஜித்து வைக்கப்பட்டுள்ளது.

நாகப்பட்டினம், திருவாரூர், இராமநாதபுரம், மதுரை, தூத்துக்குடி, திருநெல்வேலி, மதுரை, திண்டுக்கல், கோவை, திருப்பூர், ஈரோடு, சேலம், நாமக்கல், கரூர், திருச்சி, புதுக்கோட்டை மாவட்டங்களில் பல்வேறு கோயில்களுக்கு சென்றுவிட்டு புதன்கிழமை காலை தஞ்சாவூர் பெரிய கோயிலுக்கு ரதம் வந்தது.

இந்த ரதம், அரியலூர், பெரம்பலூர், திருவண்ணாமலை, வேலூர், காஞ்சிபுரம், சென்னை, கடலூர் மாவட்டங்களுக்கும் செல்கிறது.

தஞ்சாவூர் பெரியகோயில் முன் அறுபத்தி மூவர் நாயன்மார்களின் சிலைகளுக்கு மாலை அணிவித்து அபிசேகம் செய்து வழிபட்டனர்.



தஞ்சை பெரிய கோயில் முன் அறுபத்தி மூவர் நாயன்மார்களின் சிலைக்கு மாலை அணிவித்து வழிபடும் பொதுமக்கள்.

அறுபத்து மூவர் திருப்பணி மன்ற நிர்வாகிகள் கூறியது:

அறுபத்தி மூன்று அடியார்களின் இல்லந்தோறும் எழுந்தருளும் சேவகனாகத் தோன்றி சிவபெருமான் முக்தி பெற்றார் என்பது ஆன்மிக நம்பிக்கை. சிவபெருமான் வழிபாடு, குருநாதர் வழிபாடு என்பதோடு அடியார் வழிபாட்டையும் சேர்த்து ஒரே நிலையில் போற்றுவது சைவ நெறியாகும்.

அடியார் வழிபாடு என்பது இனியது. இவ்வழிபாட்டின் மூலம் முக்தி பெறலாம். இத்தகைய அறுபத்து மூவரைப் பற்றி அனைவரும் அறியச் செய்வதே இந்த அருள் ஞான உலாவின் பிரதான நோக்கம் என்றனர்.

மக்கள் குரல்

3-12-2008



அறுபத்து மூவர் அருள் ஞான உலா ரதம் சிதம்பரம் ஆயிரங்கால் மண்டபத்தில் இருந்து புறப்பட்டு தமிழ்நாட்டில் உள்ள அனைத்து மாவட்டங்களிலும் உள்ள புகழ் பெற்ற நாயன்மார்களின் கோவிலுக்குச் சென்று, அங்கு பக்தர்களின் முன்னிலையில் ஆராதனை செய்து வழிபாடு நடத்தப்படுகிறது. இந்த ரதம் இன்று காலை மயிலாப்பூரில் உள்ள கபாலீஸ்வரர் கோவிலுக்கு வந்தது. அங்கு கூடியிருந்த பக்தர்கள், அறுபத்து மூவரையும் தரிசித்தனர். இந்த அறுபத்து மூவர் தமிழ்நாட்டில் உள்ள 160 கோவில்களுக்கு ஊர்வலமாக மொத்தம் 4,750 கிலோ மீட்டர் எடுத்து செல்லப்படுகிறது. மொத்தம் 63 நாட்கள் சுற்றுப் பயணம் மேற்கொள்ளப்படுகிறது. இறுதியாக டிசம்பர் 8-ந்தேதி குன்றத்தூரில் முடிவடைகிறது. இதில் அறுபத்து மூவர் திருப்பணி மன்ற தலைவர் கி.ரா.கிருஷ்ண பிரசாத், செயலாளர் அ.சங்கர் உள்ளிட்ட பல நிர்வாகிகளும், செயற்குழு உறுப்பினர்களும் உடன் செல்கிறார்கள்.

தினமணி

வெள்ளிக்கிழமை
10 அக்டோபர், 2008

கடலூர்

# சிதம்பரத்தில் அறுபத்துமூவர் அருள் ஞான உலா

**சிதம்பரம், அக்.9:** 63 நாயன்மார்கள் சிலைகள் கொண்ட ரத யாத்திரை பாடல் பெற்ற ஸ்தலங்கள், மாவட்ட தலைநகரங்கள், நாயன்மார்கள் பிறந்த ஸ்தலங்கள் மற்றும் சிவாலயங்கள் வழியாக 63 நாகள் தமிழகம் முழுவதும் செல்கிறது.

63 நாயன்மார்களை பற்றி அறிந்து கொள்ளும் வகையில் இந்த ரத யாத்திரை சிவனடியார் திருக்கூட்டத்தினரால் நடத்தப்படுகிறது.

ரதயாத்திரையில் கொண்டு வரப்படும் பஞ்சலோகத்தினலான அறுபத்துமூவர் சிலைகள் விருத்தாசலத்தில் நாயன்மார்கள் திருப்பணி மன்றம் சார்பில் பிரதிஷ்டை செய்யப்பட்டு அங்கு நாயன்மார்கள் குறித்த ஆராய்ச்சி மையம் தொடங்கப்பட உள்ளது.

இந்த ரத யாத்திரையின் தொடக்க விழா சிதம்பரம் நடராஜர் ஆலய ஆயிரங்கால் மண்டபத்தில் வியாழக்கிழமை நடைபெற்றது.

கேதாரதீட்சிதர் தலைமையில் திருவாவடுதுறை ஆதீனம் சுப்பிரமணிய தம்பிரான் ரதயாத்திரையை தொடங்கி வைத்தார். முன்னதாக ஆலய பொதுதீட்சிதர்களின் செயலர் நி.பா.முத்து தாண்டவ தீட்சிதர் தலைமையில் திருமுறை இன்னிசை நிகழ்ச்சிகள் நடைபெற்றது.

இந்நிகழ்ச்சியில் பேராசிரியர் இரா.செல்வகணபதி, முனைவர் மு.சிவச்சந்திரன், சிதம்பரம் சைவத்திருச்சபை நிறுவனர் எம்.செல்வகுமார், அறுபத்துமூவர் திருப்பணி மன்றத் தலைவர் அ.சங்கர், துணைத் தலைவர் சோ.முத்து உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

சிதம்பரத்தில் தொடங்கி ரத யாத்திரை ஆதனூர், சீர்காழி, மயிலாடுதுறை, கும்பகோணம், திருநள்ளாறு, நாகப்பட்டினம், திருவாரூர், அறந்தாங்கி, காரைக்குடி, திருப்பத்தூர், ராமநாதபுரம், திருச்செந்தூர், பழனி, திருப்பூர், சேலம், கரூர், திருச்சி, தஞ்சாவூர், அரியலூர் வழியாக டிசம்பர் 10-ம் தேதி விருத்தாசலம் சென்றடைகிறது.



அறுபத்து மூவர் அருள் ஞான உலா ரதயாத்திரையை தொடங்கி வைக்கிறார் திருவாவடுதுறை ஆதீனம் சுப்பிரமணிய தம்பிரான் சுவாமிகள் (வலமிருந்து 4வது).

# 63 நாயன்மார் உலா ரதம் குன்றக்குடி வருகை



குன்றக்குடிக்கு வந்த அடியார் அறுபத்து மூவர் நாயன்மார் உலா ரதத்திற்கு வரவேற்பளித்த நிகழ்ச்சியில் பேசுகிறார் பொன்னம்பல அடிகளார்.

காரைக்குடி, அக். 30: சிதம்பரம் நடராஜர் கோயிலில் இருந்து புறப்பட்ட அடியார் 63 நாயன்மார்கள் உலா ரதம் வியாழக்கிழமை மாலை குன்றக்குடி வந்தது.

குன்றக்குடி பஸ் நிலையத்தில் குன்றக்குடி அடிகளார் தலைமையில் வரவேற்பு அளிக்கப்பட்டது. குன்றக்குடி தேரோடும் வீதி வழியாக ரதம் ஊர்வலமாக அழைத்து வரப்பட்டது.

பின்னர் அருள்மிகு சண்முகநாதன் திருக்கோயில் மலையடிவாரத்தில் நாயன்மார்களின் விக்ரகங்களுக்கு தீபாராதனைகள் நடைபெற்றன.

பின்னர் திருமடத்தின் முன்பாக நடைபெற்ற வரவேற்பு நிகழ்ச்சியில் பொன்னம்பல அடிகளார் பேசுகையில், 63 நாயன்மார்களின் பணியை நடைமுறைப்படுத்த ஆன்மிக உலகம் இன்றைக்கு தயாராகிக் கொண்டிருக்கிறது. காலமெல்லாம் எல்லா வளமும் பெற்றிட, இந்த மண்ணில் மீண்டும் தமிழ் முழக்கம் பெற்றிட இப்பணி தொடர வேண்டும் என்றார்.

நிகழ்ச்சியில் இலக்கியப் பேச்சாளர் நெல்லைக் கண்ணன், பிள்ளையார்பட்டி கோவிந்தானந்த சுவாமிகள், குன்றக்குடி திட்டக் குழுத் தலைவர் கே. பாலகிருஷ்ணன், குன்றக்குடி அடிகளார் கல்வியியல் கல்லூரி செயலர் எஸ். மோகன், முதல்வர் சுந்தரராஜன், குன்றக்குடி திருமடத்தின் ஆதீனப் புலவர் மரு. பரமகுரு மற்றும் பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

தினமணி
வெள்ளிக்கிழமை, 31 அக்டோபர், 2008

# அடியார் அறுபத்து மூவர் அருள் ஞான உலா ரதம் காரைக்குடி வருகை



சிதம்பரம் நடராஜர் கோயிலிலிருந்து புறப்பட்டு காரைக்குடி அருள்மிகு கொப்புடையம்மன் கோயிலுக்கு வந்த அடியார் அறுபத்து மூவர் அருள்ஞான உலா ரதத்தை தரிசிக்கும் பக்தர்கள்.

காரைக்குடி, அக். 30: சிதம்பரம் நடராஜர் கோயிலிலிருந்து புறப்பட்ட அடியார் அறுபத்து மூவர் அருள் ஞான உலா ரதம் வியாழக்கிழமை காரைக்குடிக்கு வந்தது.

இந்த ரதத்துக்கு திருநாவுக்கரசர் இறைப்பணி மன்றம் சார்பாக வரவேற்பு அளிக்கப்பட்டது.

சைவ ஆதீனங்கள், திருமடங்கள் மற்றும் தமிழக அரசின் அறநிலைத் துறை ஆசியுடன் அக். 9-ம் தேதி புறப்பட்ட இந்த அருள்ஞான உலா ரதமும், பக்தர்களும் நாயன்மார்களின் அவதாரத் தலங்களில் வழிபட்டு காரைக்குடிக்கு வந்த ரதத்தில் நாயன்மார் அறுபத்து மூவர் விக்ரகங்களும், நடராஜபெருமான் விக்ரமும் வைக்கப்பட்டிருந்தன.

திருநாவுக்கரசு இறைப்பணி மன்றம் சார்பில் இதற்கு கவிஞர் அரு. சோமசுந்தரம் தலைமையில் வரவேற்பு அளிக்கப்பட்டது. வரவேற்புக்குழுத் தலைவர் ஈப்போ நா. நாராயணன், ராகவன்செட்டியார், தமிழிசைச் சங்கச் செயலர் வி. சுந்தரராமன், ரோட்டரி பிரமுகர் பி.வி. சாமி மற்றும் விழாக்குழுவினர் பக்தர்கள் கலந்துகொண்டனர்.

தினமணி மதுரை